உ

முருகக்கடவுடுணை

# திருமலைக்கந்தரந்தாதி.

இஃது

திருவனந்தபுரம் சமஸ்தானம்

அகஸ்தீசுவரத்தைச்சார்ந்த

குலசேகரபுரமென்னும்

உயரவிளைநகர்

முருகதாசக்கவிராய ரென்னும்

**சிவராமலிங்கம்பிள்ளையால்,**

இயற்றி

செங்கோட்டையைச்சார்ந்த

அச்சம்புதூர்

மக-௱-௱-ஸ்ரீ

சிவகுருபரசிவஞான சண்முகத்தேவரவர்கள்

திரவியோபகாரத்தால்

ஷை சிவராமலிங்கம்பிள்ளையால்

திருநெல்வேலி நூருல் இஸ்லாம் பிரஸில்

முதற்பதிப்பு பதிப்பிக்கப்பட்டது விலை அணா 1.

## தேரூர் தேசிவினாயகம்பிள்ளையவர்கள் பாடியது

நத்தாருபாவிளை நகர்வாழ் சிவராமலிங்கம்
அத்தாவெனத் திருமாமலைக் கந்தரந்தாதியையே
வித்தாரமாகவியற்றி விரித்தனன் மேதினியில்
முத்தாரமா வெனப்போற்றுவர் யாருமொழிந்தனனே

## இந்நூலிற்குப் பொருளுதவி செய்தோர் துதி

திருமருவியநக்கெடுவயல் நகரிற்றேவர் தங்குலத்தினி லுதித் துங்— குருவருள் மகிமை கொண்ட சற்குணனாய்க் குவலயம் புகழ் முத்துசாமி—அருமையாய்ப்பெற்று வளர்த்ததோர் புதல்வனறுமுகன் பாதமேபணியும்—பெருமையனான சண் முகமெனப்பேர் பிதற்றுவர் பிரபலமாக

பிரபலமுளமெய்யடியவர்க்குதவி பிரியமாய்ச்செய்து நன்னெறி யிற்—றிரபலமுடைய சிங்கவேறனையான் றிருமகளிலங்கிடு முகத்தன்—உரமுறுவீரனுண்மைவாக்குறுதியுற்றிடும் பெற் றியோனான—வரமது வேண்டித் திருமலைமுருகன் பலரடி வணங்கிவாழ்கின்றோன்

வாழ்வதிற் பெரிய வள்ளலென்றெண்ணி மனமகிழ்ந்தவன் முனம்போயென்-னூழ்வினை வலியாலுள்ளன்பினுடனானுரை த்ததோர் கந்தரந்தாதி—தாழ்விலாதச் சிட்டவனியோர் புக ழ்ந் தந்திடவேண்டுமென்றியப்பும்—வேளையிலதனை மறுத் திடாதுதவி மேன்மையாய்ப் புரிந்தனன் மன்னே

மன்னவனுகமுருகதாசனுமினைசல் வாழ்த்தியபடி கிருபையுஞ்
செய்—தன்னவன்றனக்கிங்கரிய மெஞ்ஞான மளவிலாத்தி ந
மகச் செல்வம்—இன்னமுங் கொடுத்தாண்டா தரித்திடுவா
யிரங்கியே திருமலை முருகா—நன்னயமாக வாழ்ந்திடவருர்
செய் நாதனை வள்ளி நாயகனை

## விநாயகர் துதி

பொன்னந்து முத்தம் பொலிபாண்டிநாட்டிற் புகழ் பொருந்
தும்-அன்னந்துணையொடு நின்றுலவும் பன்னையம்பதிபார்
வன்னர் திருமலைக் கந்தனந்தாதி வழங்க நல்வாக்
கின்னந்தருந் துதிக் கையன் றுணையுளதிங் கெனக்கே

## முருகர் துதி

கங்கைக் குமாரனைக் கார்த்திகை நேயனைக் கானக்குற
மங்கைக்குமாரனை மாவடிவேலனை வான்புகழுஞ்
சிங்கைக்குமாரனைப் பூயாது சேயனைச் சேவித்திடில்
தங்கைக்குமரனை யாதுடன் றந்தருள் வான் சகத்தே

## நூல்

பூகங்களத்தி மாநாவற் பலாப் புன்னை பூங்கதலி
நாகங்களத்திடி மாறுலவும் பண்ணை நன்னகரில்
மேகங்கனைத்திடுமும்மாரி பெய்யும் விளைவதனால்
ஆகங்களித்த திருமலைக் கந்தனைப்பண் மின்னே (1)

அண்ணலங்காரகன் மந்தன் புதன்மதி யாதித்தனும்
விண்ணலங்காக்கும் வியாளன்புகர் பாம்பிது வந்தெனை
நண்ணலங்காதற் றிருவோங்கிட வருணல்கிடுவாய்
பெண்ணலங்கார மிகும்பண்ணை நாகம் வாழ்பேரரசே (2)

பேரரசான துறைச்சிங்கனையப்பன் பெற்றமைந்தன்
பாரரசான திற்றங்கினன்றம்பி மெய்ப்பத்தற்கன்பன்
காரரசானவன் மாலபன் போற்றுங் கடவுட்கங்கை
சேரரசாம் பண்ணை யாமலையிற் பணிந்தேற்று மினே (3)

ஏற்றுமின் காணம் மிறைவன்மெய்த்தேவ னெனவுநிதம்
போற்றுமின் காணப்புனிதனாறு முகன் பொன்பொருடங்
தாற்றுவன் வெங்கலிநோயை யகற்றியருளுவன்முன்
னேற்றுவன் பண்ணைத் திருமலைத்தேவன் றொழும்பினற்கே

தொழும்புகொள்வோர்க்குத் துணைவன்சிவன்மகன் றாயனென்
றுமர்—அழுப்புதல்வோருக்கமுதளிப்பன் முருகையன் வயல்
உழும்புராதினர்முன் வாளைகுதித்திங்குலவு பண்ணைக்
கெழுப்புலவற் கருளுந் திருமாமலை யெந்தையனே (5)

எந்தையன் வேலனிமயா சலமைந்தனியாவருக்குந்
தந்தையன் சண்முகன் றர்திக்கிலையன் சரவணனும்
விந்தையன் காங்கயன் வெஞ்சூர்தடிந்த செவ்வேளருள்செய்
முந்தையன் பண்ணை முதல்வன் றிருமலை முத்தையனே (6)

முத்தையன் கங்கையினில் முளைத்தோன் முகுந்தன் மருகன்
றத்தைமொழிவள்ளி தன் கணவனிந்திர சாலம்புனை
வித்தையன் வேதமுழு முதற்போருக்கு வீரனன்பன்
மித்தையகற்றியருள் பண்ணை மாமலை வித்தகனே (7)

வித்தகன் மஞ்ஞையன் விண்ணோர் தலைவனிம்மேதினியுட்
புத்தகத் துற்றோன் புதல்வனற் புண்ணியன் போறமட்ட
சித்தகந்தங்குஞ் சிறுவன் செஞ்சேவலன் றிண்புயத்த
மத்தகயானை பின்னோன் பண்ணையங்கிரி வாழ்கந்தனே (8)

கந்தன் மெஞ்ஞானச் சுரும்பன் கருணையன் காத்துவந்தே
பந்தம் விடுத்தருள் பாவலனின்பப் பரிசளிப்போன்
மைந்தன் மயிலவன் மால் மருகோன் வணிகன்புகழுந்
தந்தெமையாள் பண்ணைக்குன்றினில்வாழுந் தயாநிதியே (9)

தயாநிதியான தருபஞானர்தன் சசபூ நிரா
மயா நிதியான மௌனியன் வீரரில் வல்லவனம்
புயா நிதியான புனிதன் வெங்கோபன் புகழனருள் (10)
செயாநிதியோங்கு பண்ணைக்கிரிக்கோன் றுதிசெப்பினர்க்கே

செப்பினர்க்கேயருள்செய்வன் சிவன்றிரியம்பகன் சேய்
தப்பினர்க்கும் வழிகாட்டுவன் சூரசம்மாரனன்பை
யொப்பினர்க்கே யுண்மையோதுவனுக்கிரவேலன் குகன்
அப்பினருட்புகழோங்கு பண்ணைக் கிரியாசலனே (11).

ஆசலநீக்கு மதிபன்மெய்யன் பாகத்திலுற்ற
மாசகலக்கடைக்கண் பார்த்தருள் புரிமைந்தன் வள்ளி
நேசனெனப்புகனின் மலனிஷ்க்களனிலத்தில்
வாசமிகும் பிச்சி சூழ்ந்திடும் பண்ணை மலைக்குகனே (12)

மலைக்குகனிந்திரன் மாமகள் கேள்வன் வனக்குறத்தி
கலைக்கு நிகர்த்தவளை கொண்டு போனவன் கங்கைமைந்தன்
றலைக்குப்பாபாலை தினஞ்சாற்றும் பண்ணைச் சயிலன்பத்தி
நிலைக்குளுறை நேயனைப்போற்றவேயிடர் நீங்கிடுமே (13)

நீங்கிடுந் துன்பநிறைந்த மெஞ்ஞான நெறியிலின்ப
மோங்கிடும் போருளுற்றிடு மானந்த முன்னலர் பின்
வாங்கிய கலவடிவேல்கொண்டோச்சிடும் வள்ளல்கையாற்
றூங்கிப்பவத்திலுழலாதருள் பண்ணைச் சண்முகனே (14)

சண்முகன் சத்திவடிவேல் கைக்கொண்டசதுரனுமைப்
பெண்மகன் பிஞ்ஞகன் பெம்மானெனவே பிரபலமாய்த்
தன்முகங்காட்டிடும் பண்ணைச் சயிலனைத்தஞ்சமென்றே
யுன்முகங்கொண்டு தினம்பணிவோர்க்குதவுந் துணையே (15)

துணையாகவந்தன்பர் துன்பத்தை நீக்குஞ் சுதந்தரன்றன்
பிணையா நயக்கருள் பிஞ்ஞகன் பிள்ளைப் பெம்மானரவம்
அணையாயமர்ந்தவரி மருகோனமதாண்டவன்றன்
பணையாரும் பண்ணைக்கிரிக் குமரன் றுதிபாடிடவே (16)

பாடுமின் வேலன்றன் பாதாரவிந்தம் பணிர்தருட்பாச்
சூடுமினாளுந் துதித்திடுமின் குகன்றொண்டுசெய
நாடுமின்றஞ்சமெனப் பண்ணப நாகன்றாணைண்ணுமின் காண்
ஆடிய சேவல் மயிலோடும் வந்தடனாட்கொள்வனே (17)

ஆட்கொண்டனன்றேவர் தம்மையுமன்னாமவெளியின்கண்
வாட்கொண்ட சூரனை மாய்த்தோன்கிரவுஞ்சமாமலையைத்
தூட்கொளவேல்விட்ட சுப்பிரமணியன்பண்பைத் தொன்னகரிற்
சேட்கொண்ட கற்பகம்போல் வாழ்திருமலைச்சேவலனே (18)

சேவலன் பெய்பன்பு பாலிப்பவன் திருமால் மருகன்
காவலனாகவுளங்கொள்விரகக் கணையதனால்
மேவலர் மானுமின்னே நினைச்சேர விரும்பினனிப்
பூவலகோர் புகழ்பண்பைக் கிரியில்வாழ் புண்ணியனே (19)

புண்ணியன்றொண்டு புரிந்தவற்கன்பன் புகழ் சுப்பிர
மண்ணியன்முருகனைவதைத்தாள் மைந்தன்வண் கையில்வே
கண்ணியன் கார்த்திகை நேயன் சடப்பன் களிபெருக்கும் (ற்
பண்ணியமோங்கு பண்பைக்கிரிக் கந்தன்பதஞ்சரணே (2 )

சரணெனக்கொண்டோர் சகாயன்றனஞ்செயந்தந்தசுரர்
மு ணினைத்தீர்த்தனனென்றன்பர்போற்ற முளைத்தவனம்
பரணிலுறும்பெண்ணைநின்னைப் புணரக் கண்பார்த்திருந்தான்
அரணகழ்சூழ்பண்பையாசலன்றாளையடைந்துய்மினே (21)

உய்மின் கலையின் விழியணங்கே மனதூடல் கொண்டிங்
கெய்மதன் வாழிக் கிளைத்தனையே யிருந்தென்னபலன்
செப்மின் குகன் றெண்டுசீக்கிரமா யிச்செகமதனில்
ஐநிதியோங்குபண்டைக்கிரிக்கோனிற் கருந்துணையே (22)

அருந்துணையானவனைங்கரன் றம்பியற்கொரு
பெருந்துணையாகிய பெம்மான் மகன் பிரியாமல் முனம்
வருந்துணையிங்கி வனல்லாது கண்டிலை மானிலத்தே
தருந்தவந்தானமரும் பண்டைநாகன்றாள் சார்ந்தவர்க்கே (23)

சார்ந்துபணிந்திடுவோரைத் தற்காப்பவன் றஞ்சமென்றே
போர்ந்து புகழ்ந்திடும் பாவாணருக்குபதேசிப்பன்முன்
றேர்ந்து தெளிந்தவருள்ளத் தினிக்குஞ் சிவானந்தமே
சேர்ந்துறை பண்டைக்குகனைத் தினமுந் துதித்திடுமே (24)

துதித்த நற்கீரன் சிறைவிடுத்தோன் சுபஞ்சோதிமைந்தன்
மதித்ததேவாதிடரைக் காத்தவன் வடிவேலனுளம்
பதித்தவரைப்பரிபாலிப்பவன் பண்டைபங்கிரியில்
உதித்தறுமாமுகனுயுறைந்தான் சரணுண்டெமக்கே (25)

உண்டுறங்கி விழித்தேயலுத்திங்குடல் மெலியப்
பெண்டிரும் பிள்ளை சுதமெனத் தேடிப்பிரியம் வைத்துக்
கொண்டுரெமன் கூப்பிடும்போது கூடவாதிதென்றே
கண்டோருள் பண்டைநாகனைப் போற்றிற் கதியுமுண்டே (26)

கதியுளதென் றுட்கசிந் திடுவோர்க்கருள் கந்தனல்ல
மதியுளன் கேட்டவரந் தருவன் மஞ்ஞைவாகனன்பொன்
னிதியுளன் ஞான நிறைந்தவனின்ப மிகழும் பண்பைப்
பதியுளன்றன்பதம்போற்றினற் கிங்கருள்பாலிப்பனே (27)

பாலிக்கும் பேரருட்பா வாணர்கட்கிந்தப் பாரிற்சுவை
கூலிக்குச்சம்பளமேகொடுப்பாரென்றகொள் கையைப்போல்
மோலிக்குருபரன் பேரருளீயமுளைத்தவன் செஞ்
சாலிக்குள்வாளைகுதிக்கும்பண்பைச் சயிலன்சதமே (28)

சயிலன்றிகம்பரன்றன் சுதன் செட்டி தனது கையில்
அயிலன் செஞ்சேவலனறுமுகன் முருகையன் பச்சை
மயிலனனங்கனென வழகன் பண்பைமாகிரியில்
ஒயிலுடன் வள்ளி தெய்வானையுடன் வளருத்தமனே (29)

உத்தமனன்பர்க்கு கந்தவன் பேரன்புடையவன் சேர்
சுத்தமனத்தருக்குத் துணையானவன் றுன்பமதை
நித்தமகற்றிடு நேயன் மெஞ்ஞான நிலைவிளக்கன்
சித்தமருள் பெருகும் பண்பை நாகனைச் சேவியுமே (30)

சேவியாதிங்கு வீணாளைக்கழித்துத் திரிந்தலைந்தே
பாவியாய் வாழல் முறையலவே பண்பையங்கிரியை
மேவியானுன் றஞ்சமென்றிறைஞ்சிக்குக வேளனிடம்
ஆவியுடல் பொருளுன்ன தென்றுலறுப்பானிடரே (31)

அறுப்பானிடரை யறுமுக வேலனருள் புரிந்தே
மறுப்பானெனமனிக்குறினும் நிரயமுமாற்றிவைப்பன்
வெறுப்பாயிருந்திடாதென்னையாட்கொள்ளுஞ்செவ்வேளென்பி
பொறுப்பாமெனப்பண்பைநாகனை நித்தமும்போற்றுநெஞ்சே (மை

நெஞ்சேயுனக்கென்ன போதித்த போதிலு நித்தியமும்
பஞ்சேயெனுங் கழற்பாவையர் மாயையிற்பட்டுழன்றாய்
செஞ்சேவல்கொண்டமெய்த்தேவனைச் சேவிக்கிற்சீக்கிரமாய்
அஞ்சேலென வந்தருளுவன் பண்பைமலைபனே (33)

அய்யன்றிரிபுரமன்றெரித்தோன் மைந்தனம் புவிக்கோர்
மெய்யன்விகிர்தன் விளங்குகைவேலன் விமலனெனுந்
துய்யன்றிரிபுரை வாலைபுவனை துதிப்பவனும்
வைபந்தனிலொளிர் பண்பைத் திருமலைமாயுரனே (34)

மாயுரனன்பர் மனத்தில்வதிபவன் மாவிடையோன்
சேயுரன் றேவர்சேனாபதியாகிய செஞ்சிலம்பன்
தாயுரனாகவருள்புரி சண்முகன் சத்துருவைக்
காயுரன்பண்பைத் திருமலைக்கந்தன் கழறஞ்சமே (35)

தஞ்சமென்னத்தினம்போற்றிடும் பேர்க்கருடந்திங்கொரு
பஞ்சமிலாதபடி காத்திடுவனிப் பாரிலிடர்
கொஞ்சமும் வந்தணுகாமல கற்றுங்குலதெய்வமாங்
கஞ்சனைவென்றோன் மருகன்றிருமலைக்காரணனே (36)

காரணன் செச்சையன் கங்காதரிமைந்தன் காதலற்கூட்
பூரணன் ஞானமெய்போத விளக்கன்புனிதன் புகழ்
நாரணன்றன் மருகோன் குகனுமிந்த நானிலத்தில்
ஆரணம்போற்றிடும் பண்பைச்சிலம்பனறுமுகனே (37)

அறுமுகக்காமக்கணையைந் துந்தைத் தவளங்கமெலாங்
குறுகியசிற்றிடையாளுந்துயின்றிலள் கோகனக
நறுமலர்க் கண்களும் பூத்ததிராப்பகல் நானிலத்தே
குறுமுனிபோற்றிடும் பண்பைக்கிரிவாழ்குலதெய்வமே (38)

குலதெய்வன்வேதங்கள் கூறும் பொருளன்கைகூப்பினர்க்கே
நலதெய்வன் முன்னஞ்சமுண்டோன் புதல்வனலஞ்சிறந்த
பலதெய்வமுங்குடிகொண்டிடும் பண்பைப்பருவதத்தை
யலதெய்துவதிலை துன்பமகற்றற் கருமருந்தே (39)

மருந்தானவனன் பர்வன் பிணிமாற்றவே மாமகட்கு
விருந்தானவன் வெய்யகாலனைக் கொன்ற விமலன்சுதன்
தருந்தானம் ஞானந் தழைத்தோங்குஞ்செல்வன்றன்சன்னிதியிற்
பெருந்தாரைசங்கமுழங்கிடும் பண்பைவாழ்பேரின்பமே (40)

இன்பந்தருந் திருச்செல்வி மருகனிறைவனென்றுந்
துன்பந்துடைத்தருள் தோன்றலெனவே சுருதிபுகழ்
அன்பன்றெரிசனங் கேட்டிடும்பேறதளிக்கும் பண்பை
முன்பன்றிருமலைமேவி யிருந்தனன் மூடர்களே (41)

மூடர்கள் சித்தத்துறையாதவன்போர் முனையதில்விண்
ணூடர்கட்காகவே வெஞ்சூரைமாய்த்தவனை நிலத்தில்
வேடர் குலக்குறவள்ளி வியந்த விசாகனென்றுஞ்
சீடர்கள்போற்றிடும்பண்ணைச் சிகரனைச்சென்றுய்யுமே (42)

சென்றுயர் வானண்டகோளந்திடுக்கிடச் செங்கையினில்
அன்றுயர் வேலைப்பிடித்தமரிற் போயசுரர்களைக்
கொன்றுயத்தேவரைக்காத்தவன் பண்ணைக் குடகிரியில்
நின்றயர்வாரைக்கண்பார்த்தருள் வான்வளர்நின்மலனே (43)

நின்மலனன்புடன் போற்றினவற்கிந்த நீணிலத்திற்
கன்மமகலத்தவமே பெருகக்கருணை செய்வன்
சென்மமரணமுமற்ற சிவன்சுதன் சேவைபெற்றால்
குன்மங்கொடுஞ்சுரம்போக்குவன்பண்ணைக்குன்றிற்குகனே

குன்றுக்குகந்த குருபரன் கோமழையாள் குமரன்
நன்றுக்குவந்தருணாயகனன்பர் நனியகற்ற
மன்றுக்குவந்து நடப்புரிந்தோன் கண் மணியன்வளர்
கன்றுக்குப்பால் பெருகும் பண்ணைமா மலைக்காதலனே (45)

காதலனன்பர்க்கு நற்கதியீதெனக் காட்டியிந்தப்
பூதலந்தன்னிற் புகழ்பண்ணையங்கிரிப்புங்கவன்மெய்ப்
போதகனிந்திரன் போற்றிடுகின்ற புலவனருள்
ஈதலிரக்கம் வைத்தாண்டிடுவோன்றுணையிங்குண்டுமே (46)

உண்டனனற்றினைமாவையுமன்றிக்குவந்துவைமேவற்
கொண்டனனென்றென் குறைதவிர்ப்பானெனக்கொண்டல்தனைக்
கண்டனன்பண்பைத் திருமலைக்கோனை யிக்காசியினில்
விண்டனத்தோர் புகழ்வேலனருள் பெறவேண்டினனே (47)

வேண்டுவதன்றி வினைப்பயனால் வருவேதனையை
யீண்டுவழுத்துவதி யாரிடத்தேதபிக மீதிலெனை
யாண்டுமெய்யன்பர் குழுவினிற் சேர்த்து வந்தாதரிக்க
வேண்டும் புகழ்பண்பைமாகிரிமேவிய வேலவனே (48)

வேலவன் விக்கினந்தீர்த்தருள் வேழனுக்கிளையவன் முன்
பாலவனிக்குட் புகழுந்துதி சொலும்பாவலர் செங்
கோலவருக்குங் குணக்குன்றனும் பண்பைக் கோன்கழலைச்
சாலவணங்கினற் கிங்கருள் பாலிக்கத் தங்கினனே (49)

தங்கினனன்பருளந்தித்திக்குஞ் சச்சிதானந்தனின்
பங்கினில்வாழுமைபாலன் பரமகுருபரன் செங்
கொங்கினமேவு பண்பைக் கிரியிற் குடி கொண்டருளி
யிங்கினல் தீரக்கண்பார்த்தருள்வா னெம்மிறையவனே (50)

இறையவருக்கமுதைக் கொடுத்தோன் சுதனெந்தை சதுர்
மறையவரும் புகழ் வாகையன் முத்தமிழ் வாயனின்பத்
துறையவன் ஞானந்துலங்கக்கை காட்டுஞ் சுகிர்தனென்றுங்
குறையகற்றும்பண்பைக்குன்றினில்வாழ்குமரக்குருவே (51)

குமரக்குருபரன் கூற்றுதைத் தோனருமைக்குகன் முன்
றமரக்கடலிற்று யின்றோன் மருகன் சரவணன் வெஞ்
சமரக்களத்திற் பகைவரைச்செற்ற தடம்புயத்தோன்
அமரற்குலகற்கருள்புரிபண்பாசலத்தண்ணலே (52)

அண்ணாவெனத்துதித்தாடகச்சீரடியைப் பணிந்தே
பண்ணாலுமாமறையோர் புகழ்நல்வழிபற்றி நின்றே
விண்ணாடர்போற்றிடமேவும் பண்பைக்கிரிமீதருமைப்
பெண்ணாரிருவர்களோடுறைந்தானமைப் பேணுதற்கே (53)

பேணுவன் பேரருளே புரிந்தோங்கு பிரபலன்முன்
வேணுவனத்தர் விழியிலுதித்த விகிர்தனன்பர்
காணுவதற்கிங்ஙன்பண்பை மலையில் வாழ்கந்தனென்றும்
வாணுதலார் கணடனத்தைப் பார்க்க வதிந்தனனே (54)

வதிந்தவன் பண்பைத் திருமலைமீது நான்மாமறையுட்
பதிந்தவன் பேரன்பு பாலிப்பவன்றமிழ் பாப்புகழில்
முதிர்ந்தவன் சக்கிரிமாமருகன் முளரிப்பதத்தன்
பொதிந்தவதனன் கதிரவந்தபுரவலனே (55)

புரத்தையெரித்துப் புறந்தளாதன்பர்கள் போற்றிட நல்
வரத்தை யளிப்பவன் மைந்தன் வணங்காமுடி மௌலி
சிரத்தையறுத்து முன்றேரூர்ந்தவன் றிருமால் மருகன்
உரத்தைத்தரித்த வடிவேலன் பண்பைக்கிரியுக்ரனே (56)

உக்கிரவேல்கொண்டுடன் சத்துருவினுடல் நடுங்க
வக்கிரமாகமனந் துணிந்தேவிட வானகம்பூச்
சக்கிரவாளகிரிகள் பொடிபடத்தாக்கினனைச்
சுக்கிரவாரம்போய்ப் பண்பைக்கிரியிற் றுதிசெய்மினே (57)

துதிசெய்வதனமருள் மந்தகாசந் துலங்கிட நல்
மதிசெய்பவன்றன் கணைபேவினன் பண்பைமாமலைவாழ்
சுதிசெய்வதனக்கருணைபொழியு மென்காதலனைப்
பதிசெய்வதனத் தழுந்தவுஞ்சேர்வனோ பைந்தொடியே (58)

தொடிக்கை தழுவத்துயிலுமெய் சோரத்துணைவனுடம்
படிக்கை தவறுதறநெறிபூண்டிடப்பாரில் மதன்
பிடிக்கைங்கணையேவினன் பண்பைநாகப் பிரபலனின்
னடிக்கைம்புலனொருமித்து வருடினளாரணங்கே (59)

ஆரணங்குன்னையணைய விரும்பியவாசையினால்
தோரணங்கட்டிய பண்பைத்திருமலைத் தோன்றவின்று
வாரணங்கூவிடும் வாயலிலே வந்து வாடினள் சூர்
மாரணஞ்செய் சமதிவல்லனே யருள்மாநிலத்தே (60)

மானினையேந்திய சங்கரன் சேயுன் மலர்ப்பதத்தைத்
தானினையேந்திழை சஞ்சலநீக்கித் தற்காத்திலையோ
யானுனையேய்ந்திடக் காத்தல்லுகமாய் வருந்துவதற்
கேனினமேந்தலிரங் கலைபண்பைக்கிரியிறையே (61)

இறைவனத் தெந்தையிணையடி போற்றினந் திங்கையத்
துறைவனத் தெந்தைசுரற் கமுதீய்ந்தோன் சுதன்முத்திழ்ந்த
துறைவனத் தன்றிருத் தொண்டுகள் செய்திடச் சோம்பினற்கே
மறைவனத் தேய்ந்திடும் பண்பைச்சிலம்பினில் மன்னினனே

மன்னினற் கோரன்பு வாய்ந்தவன் பண்பை மலையன்புகழ்
உன்னிநற் கீரன்புகல்வது கேட்டனுக்கிர வேல்
துன்னினற் கீறெனப் பூதஞ் சிதறத் துருபிச்சிறைக்
கன்னியமாயின் றன்புசெய் தோனுக் கடிமைகொண்டே 63

அடிமைகொண் டானந் தன்னையனுபவித் தாரைமுனங்
குடிமைகொண் டானந்தன் கோவெனும் நுந்தைகுமரனெனை
மடிமைவிண் டானந்த மாமலர்ப் பாதம் வதியெனவே
படிமைவிண் டானந்தவமேவு பண்பைப்பருவதனே (64)

பருவதத் தன்வளர் பண்பைப்பதியன் பேரன்பு கொளுங்
கெருவதத்தன் மிளிர் கேகயந்தன்னிற்கிளர் மன்னனைப்
வருபதத் தன்றஞ்சமென் பேரைக் காற்கவதிந்த வனற்
றிருவதொத் தென்றுமென் சித்தம் புகுந்தருள் சிற்பரனே 65

சிற்பரனீன்ற சிறுவன் சேனோர் துதிசெய்யுஞ் செல்வன்
தற்பரனீயுந் தயாநிதி பண்பைச்சயிலனின்ப
மிற்பரதேசிக்கிரங்கிப் பேரின்பத் திருவெனவே
சொற்பிரயோசனமாக வளிக்குஞ் சுடற்கொழுந்தே (66)

சுடற்கொழுந்தானவன் சூக்குமகாரண தூலவுடல்
இடற்கெழுந்தானவன் சஞ்சிவி யென்ன இருநிலத்தில்
கடற்கொழுந்தானவன்றன் மருகன் வள்ளிகாதலன்மெய்ப்
தொடற்கெழுந்தானவர்போற்று பண்ணைக்கிரித்தூயவனே 67

தூயவனம்பயில்மாதொடு கூடிவாழ் தோகையதற்
காயவனம்பயில் வாழ்கரமேந்திக் கடிதகன்றே
போயவனம் பயிற்போக்கு பவற்கருள் புண்ணியனந்
நேயவனம்பயிற் பண்ணைக்கிரிக்குகனேரிழையே (68)

நேரிளங்கொங்கைக்குரும்பையைக் கண்டுசெய்நிந்தனையைப்
பாரிளங்கொங்கையார் சோலையிலே நினைக்கைப்பற்றவே
பேரிளங்கொங்கைப் பொழியும் பண்ணைக்கிரிப்பிஞ்ஞகனின்
ஞாரிளங்கொங்கையாள் காத்து நின்றங்க நலிந்தனளே (69)

நலிந்தனகாதலுடனுன்னை நாடி நகை முகங்கள்
மெலிந்தன கண்கடுயின்றில நினின்பமேவுதற்கே
பொலிந்தனகொங்கைபுகலென்னசொல்லிந்தப்பூங்கொடிக்
மலிந்தனமேவுபண்ணைத் திருமாமலை வாழ்பவனே (70)(கே

வாழ்பவனம் பரமற்குபதேசித்தவாயன் மனஞ்
சூழ்பவனம்பரமீது பண்ணைக்கிரிச்சுவாமி நமை
யாழ்பவனம் பரயோகத் தழுந்தவந்தன் பொடின்பத்
தாழ்பவனம் பரமுத்தி யிந்தாவெனச் சாற்றுவனோ (71)

சாற்றுவ னஞ்சமு தாக வருந்திய சங்கரன் சேய்
மாற்றுவனஞ் சஞ்சலந்தனை பென்றிந் தவையகத்திற்
போற்றுவனஞ்சு புலனுட்புக வந்தருள் புரிந்தே
தேற்றுவனஞ்சேமெலனப் பண்ணைநாகனென்சேயிழையே 72

சேயிழையாதவள் பண்ணைத்திருமலைச் சேவகநின்
னாயிழையாதவம் போக்கின மென்றிவ்வவனியின் கண்
ணேயிழையாதின்ப நோக்கினள் போலு நுடங்கி நொந்தே
வாயிழையாது மௌனமுற்றுளுந்தன் மையல்கொண்டே 73

மையல்கொளுந்தலைமானார் விழியுன் மயக்கிற்பட்டே
தையல் கொளுந்தனம் பூரித்தங் கன்னத்தளர் நடையின்
சையல்கொளுந்தகையுங் குறைந்தாளுமை தான் பயந்த
பையல் கொழுந்தலர் பண்பாசல நான் பகர்வதென்னே (74)

தென்னம்பலத்திற் றிருவிளையாடல்கள் செய்துமுனம்
பொன்னம்பலத்தில் நடனம் புரிந்தவன் புத்திரனைப்
அன்னம்பலத்திசூழ்பண்ணைக் கிரியில் வாழாறுமுகா
உன்னம் பலத்துறுமாலை தலைவிக்கு வந்தருளே (75)

உவந்தருள் மாயலற்பந்தரின் மீதுற வோரறியச்
சிவந்திரு மாலயன்றேவரும் போற்றநற் சேயிழையை
நவந்தருமன்றல் புரிந்தின்றிங்கின்பொடு நானிலத்தில்
தவந்தருமாதியருள் பண்ணை வெற்பினிற்றங்கினனே (76)

தங்குகவேளைங் கணைக்குயர் தையற்றனது கண்வேல்
இங்குகவேளைப்புலனுற மஞ்சத்தினிலிவர்ந்தே
நங்குகவேளைங் கருணைக்குகந்தின்ப நல்கிநகை
பொங்குவவேழமிகும்பண்ணை வெற்பிற்புகுந்தனனே (77)

புகுந்தனத்தாரயன்மால் பொற்றொடியார் புகழ்வதன
நகுந்தனத்தாரயன்மால் கொண்டிடச்சேர் நலமதனால்
தகுந்தனத்தாரயன் மாலைபுனைந்திடாத் தையலணி
மிகுந்தனத்தார்பண்ணைப வெற்பன்சரணென வேண்டுநெஞ்சே

நெஞ்சஞ்சலந்தனைக்கண்டு கேட்டுண்டு நிகழ்வதுபோல்
அஞ்சஞ்சலந்தனை நீத்தருள் பண்ணையசலன் முன்போய்த்
தஞ்சஞ்சலந்தனை யோதிக்குமரத் தயா நிதியைக்
கெஞ்சஞ்சலந்தனை யாதருள் பாலிப்பன் கேடின்றியே (79)

கேடகக் கண்ணற்குட்புக்காரவற்குக் கிருபைசெய்பா
நாடகக் கண்ணற்குட்புக் காருள் மெய்நலமதனைத்
தேடகக் கண்ணற்குட்புக் காருமைத் திறலளிக்குஞ்
சூடகக் கண்ணற்குட்புக்கார் பண்ணைக் கிரித்தோகையனே

தோகையனக் கணிமார்பனென்றுன்பத் துடக்கறுக்கும்
ஈகையனக் கணிமாரனை வென்ற விபலழகன்
வாகையனக் கணிமாசலை யீன்றதோர் மைந்தன் பண்ணை
நாகையனக் கணிகொண்டவன் றன்பத நாடகமே (81)

நாடகங்கொண்டுடன் றுன்பமகற்றி நடனபத
நாடகங் கொண்டுடற் பூரிக்கஇன்ப நலமளிப்பன்
நாடகங் கொண்டு புகழுவருள்புரி நப்பன்மக
நாடகங் கொண்டுறை பண்பைக்கிரிக்குகனம் பாத்தே (82)

அப்பாரத்தானந்தாதீதப் பொருளாய மர்ந்தமரில்
பம்பாரத்தானந்தாதைப் பரமன் புகழ் பண்ணவன்முன்
னும்பாரத்தானந்தா வென்றிறைஞ்சத் தனதுள் மகிழத்
தம்பாரத்தானந் தந்தாண்டிடும் பண்பாசலபதியே (83)

பதியாதுளத் தற்புதமாக் குகனையும் பாவிநெஞ்சே
துதியாதிளத்தல் முறையலவே துன்பசாகரத்தை
மதியாதெளத் தலைவாயலில் நின்று மனப்வருந்த
விதியா தழைத்தருள் செய்வான் பண்பைக்கிரி மேவினனே

மேவுஞ்சகல கலைபாகமங்களுநம் விள்ளுநெறி
யாவுஞ் சகத்தினிற் கேட்டறிபாய் கொல் மடநெஞ்சமே
பாவுஞ் சகசமாய்ப்பாடிப் புகழுவாய்ப ண்பைமலைத்
தேவுஞ் சகமுனுப் வந்தருள் வானிற்குச் செப்பினனே (85)

செப்பும் படிக்கன்பு செய்தே தினமுஞ் சிவாகமநூல்
ஒப்பும் படிக்குமெய்த் தொண்டுசெய்வாய் குகவேலனுக்கே
தப்பும் படிக்குத் தபவு செய்வான்பவந்தன்னைவிட்டே
அப்பும் படிக்குளுனைபாள்வன் பண்பாசலத்தாசே (86)

அரவந் தனையணிந்தம்பல மீதேயமர்ந்தருளைத்
தரவந் தனையுமையா ளொடுவந்திந்தத் தாரணியிற்
சிரவந் தனைசெயு மெய்யன்பர் சிந்தையிற் செல்லான் சேய்க்
குரவந் தனைப்பணிந்தேத்து நெஞ்சேபண்ணைக்குன்றினிலே

குன்றம்பொடித்தவைவேற் கொண்டசுரரைக்குத்திக்குத்திக்
கொன்றம்பொடித்தகைவானவர் கோவுங்கை கூப்பவந்தோன்
அன்றம் பொடித்த விசையற்குப் பாசுபதமளித்தோன்
இன்றம்பொடித்தவெண்ணீறரன் சேய்பண்ணைவெற்பினனே

வெற்பன் விநாயகனுக் கிளையோனிந்த மேதினியில்
அற்பன் புலம்புதல் கேட்டருள் பாலிக்கு மாறுமுகன்
பொற்பன் மணிமுடிவேந்தற்கு வேந்தன் புகழும் பண்ணைப்
பொற்பன் மலரடிபோற்றிங்கருள்வன் புலைநெஞ்சமே (89)

புலவற்கருளும் புகழோங்கச் சித்தம் புகுந்த சிற்றம்
பலவற் கருமைக்குமரனாய் வந்தவன் பாரினிற்போர்
வலவற் கருந்திறல் வாகையளிக்கு மகிபனென்றும்
நலவற்கருள் குருவாம் பண்ணை நாகனை நாடில் நன்றே (90)

நன்றென்றனுதினம் நாடுநெஞ்சே பண்ணை நாகனையே
யின்றென்று நாளை யென்றெண்ணினையாகி லெமன்கயிற்றி
லொன்றியுன்றன் னுயிரொடும்போதிங்கோர் துணையுளதார்
என்றென்றறிந்துணராமலலைந்ததா லென்பயனே (91)

பயனைபறிந்து மெய்ப்பத்தி செய்வார்க்குப்பரிசும் நல்ல
விபனை பளித்தருள் பண்ணைக்கிரியில் வாழ்வேலன் முனம்
அயனையருஞ் சிறைவைத்தோனபக்கிங்கருள் குருவாங்
கயனையும் வென்றவடிவேல் முருகன் கழல்பணியே (92)

பணியாபரணமாய்ப் பூண்டபரமன்றன் பாலகன்கன்
மணியாமலை கடல் சூழ்புவியிற் பண்ணைமாகிரியன்
றணியாரிருள கலக்கடைக்கண் பார்த்திடுவ னெஞ்சே
பிணியாவையுந் தீர்த்தருள்வான் முருகப் பிரானபக்கே (93)

நமக்கிங்கருளபுரி நாயகனும் பண்ணை நாதக்குகன்
றமக்கிங்கனற் புகழ்ப்பாமாலை பாடியே சந்ததமும்
எமக்கிங் கினிமையாஞ் செல்வமருளென் றிறைஞ்சினையால்
உமக்கு நமக்கு மொருகுறை வில்லையுலகத்திலே (94)

உலகங்களிற் பிறந்தோடி யுலாவியுயிர கற்றுங்
கலகங்கள் செய்பவருவானெமனப்போகாப்ப திங்கார்
திலகங்களிட்டு மருட்டிருமாதர் கைமாறென் செய்வர்
பலகங்கை யோங்கு பண்ணைக்கிரியன் றுணைபார்மனமே (95)

மனுமெனுந் தோணியதிலேறி யானந்தமாகடலிற்
றினமேகும் பேரறிவானவன் கண்டதிருநடத்தை
யினமேநீகைக்கொள வெண்ணு திருந்தனைபாலென்செய்வன்
அனமேவு பண்ணைக் கிரிக்குமரன் றனையண்மியுய்யே (96)

உப்பும் வழிதெரியாதவற் கிங்ஙனுறு துணையாய்
மெய்யும் புகழுர் புரியும் பண்ணைக்கிரி வேலனருள்
செய்யு மெனத்தினந் தேடிப்பணிந்திடிற் சீக்கிரமாய்
அய்யுங் கெடவந்தருள் வானுனக்கிங் கறிந்துகொள்ளே (97)

அறியாத மூட மடநெஞ்சமே பண்ணையங்கிரியன்
பொறியாறதாய் வந்து பூம்புனல்தன்னிற் புகுந்துவளர்
குறியாறு மாமுகங் கொண்டத் தனிக் குவலயத்தில்
நெறியாருளானந்த பூரணமா யுறை நிற்குணனே (98)

நிற்குணனின் மலநீங்கா மெய்யன்பர் நினைவில்வளர்
சற்குணன் றற்பரன் றூயகமாகிய சங்கரன் சேய்
முக்குணமுங் கடந்தண்டத்துக்கப்பால் முளைத்தெழுந்த
எக்குணமு நினைபல்லா திலை பண்ணை ஈசுரனே (99)

ஈசுரனியாவற்கு மேலான வெந்தை யிணைபடியைச்
சாள்பதமாகத் தொழுதேத்துகின்ற நற்சற்சனர்தன்
மாசுபுறம் புகபாத வங்கையுற வந்தருள்வன்
பூசுரர் போற்றிடும் பண்ணைத் திருமலைப் புங்கவனே. (100)

திருமலைக்கந்தரந்தாதி முற்றிற்று

முருகக்கடவுள் துணை